11th February 1958]

(iii) Training as midwives, nurses, teachers, Gram Sevikas, etc., and finding employment outside.

(iv) Appointing them as matrons, cooks, etc., in the institutions themselves.

(v) Sending them as domestic servants.

(vi) Sending them to approved Social service institutions.

SRI N. K. PALANISAMI : ஸார், விபரசார விடுதிகள் வைத்து அங்கு வருகிறவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு மூன்று மாத கால ட்ரெயினிங் தான் கொடுக்கப்படுகிறது. அதனால் அந்தக் காலத்திற்குள் அவர்களால் பூராவும் பயிற்சி பெற முடியவில்லை. அதனால் அவர்களுக்கு ஒரு வருஷமாகிலும் பயிற்சி கொடுத்து பூரா தொழிலையும் கற்றுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி கனம் அங்கத்தினர் நினைக்கக்கூடிய தொழில் கற்றுக்கொடுப்பது இல்லை. அங்கு ட்ரெய்னிங்குக்கு வருகிறவர்களுக்கு கைத்தொழில்கள் தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தந்த தொழில்களில் அவர்கள் நல்ல பயிற்சி பெற்ற பிறகுதான் அவர்களை வெளியே அனுப்புகிறார்கள். பரிபூர்ணமான தேர்ச்சி அவர்களுக்கு வருகிற வரையில் அவர்களை வெளியே அனுப்புவது இல்லை. வெளியே சென்றால் கைத்தொழிலை நல்ல முறையில் பயிற்சிவிக்கக்கூடிய நிலைமை வந்தால் தான் அவர்களை அனுப்பப்படுகிறது.

SRI A. A. RASHEED : Is it true that under the pretext of enforcement of the Immoral Traffic Act, the hotel-keepers are harassed by the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If any one commits the offence of abettment, punishable under this Act, he should suffer even harassment.

Second Pay Commission

* 45 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have represented to the Centre to bring the Madras State Services within the purview of the Second Pay Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI S. LAZAR : ஏற்கனவே அதிகச் சம்பளம் வாங்கும் மத்திய சர்க்காருடைய ஊழியர்களுக்கு மேலும் அதிகப்படியான சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் மாகாண சர்க்காருடைய சிப்பந்திகளுக்கும் அதிகப்படியான சம்பளம் கொடுக்கவேண்டும் என்று நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறார்களா? அதைப்பற்றி கமிஷனிடம் ஏதாகிலும் சொல்லி இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி சம்பளக் கமிஷனிடம் புகார் செய்து பிரயோசனம் இல்லை. ஆனால் இதைப்பற்றி மத்திய சர்க்காரிடம் நாங்கள் ஒரு யாதாஸ்தை சமர்ப்பித்திருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, even though the non-gazetted officers of our State do not come under the purview of the Second Pay Commission appointed by the Government of India, have the

[11th February 1958

Government of Madras thought about giving the same considerations that are recommended by the Second Pay Commission, to the non-gazetted officers whose relief was contemplated in Cabinet deliberations?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to remind hon. Members that it is only very recently that an all-round increase of Rs. 12 in dearness allowance was given to the N.G.Os., and that it costs the Government Rs. $4\frac{1}{2}$ crores per annum. I am sure hon. Members would, during the Budget time, see our resources position and then they may make further suggestions whether it would be possible for us to give any more dearness allowance at present.

SRI A. GOVINDASAMY : மத்திய சர்க்காருக்கு யாதாஸ்து அனுப்பி இருப்பதாக சர்க்கார் தரப்பில் சொல்லப்படுகிறது. அதைப்பற்றிய விவரம் அறியலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பற்றிய விவரம் இப்பொழுது என்னுடைய கையில் இல்லை. அதைப்பற்றி தனியான கேள்வி போட்டால் விவரம் சொல்லுகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : சம்பளம் கொடுக்கும் விஷயத்தில் மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்கும் பாரபட்சம் காண்பிப்பது சரிதானா ? மத்திய சர்க்கார் சிப்பந்திகள் இரண்டாவது சம்பள கமிஷனின் சலுகையை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் போது மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்கு இன்னும் முதல் சம்பளக் கமிஷனில் சலுகையையே கொடுத்து அமுல் நடத்தாமல் இருப்பது சரிதானா ? அப்படிக் கொடுத்து சலுகை காண்பிக்க இந்த மாகாண சர்க்கார் முன் வரவேண்டாமா ? இப்படி பாரபட்சம் காண்பிப்பது சரிதானா ?

THE HON SRI C. SUBRAMANIAM : நமது சர்க்காருடைய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டியது நம்முடைய பொறுப்பு, அது நமது கையில் இருக்கிறது. இந்த மாகாண சர்க்காரால் எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்கப்பட்டுதான் வருகிறது. அதனால் பாரபட்சம் ஒன்றும் காண்பிக்கப்படவில்லை. சம்பளம் கொடுப்பதில் வடக்கே இருக்கக்கூடியவர்களுக்கும், தெற்கே இருக்கக்கூடியவர்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அரசாங்கமும் தங்களுடைய வருவாய்க்குத் தக்கபடி எப்படி சம்பளம் கொடுக்க வேண்டும் எவ்வளவு மக்கள் நன்மைக்கு செலவிடப்பட வேண்டும் எந்த வகையில் பிரயோசனப்படுத்தப்பட வேண்டும் என்பதையெல்லாம் திட்டம் போட்டு வகுத்திருக்கிறது. அதன் மூலம் தான் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அவ்விதம் எப்படி வருவாயை செலவு செய்யவேண்டும் என்று இந்த சட்டசபை தீர்மானம் மூலமாக தீர்வு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.

Non-Gazetted Officers

* 46 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to increase the dearness allowance of and to provide amenities such as house-rent allowance or free quarters to all Non-Gazetted Officers in view of the additional Revenue derived by the Government on account of the recommendations made by the Second Finance Commission?